FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
# Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | பரதநாட்டியம்– I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ **சரியான விடையினைத் தெரிவு செய்து புள்ளடி இடுக.**

01) உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் இடம்
(1) பேரம்பலம் (2) நிருத்தசபை (3) ராஜசபை
(4) சிற்சபை (5) மூலஸ்தானம்

02) இராமநாதன் நுண்கலை கல்லூரியில் 1965 ஆம் ஆண்டில் கற்ற மாணவர்களுக்கு இறுதித்தேர்வில் வழங்கப்பட்ட பட்டம்
(1) நுண்கலைமானி (2) சங்கீத ரத்தினம் (3) நாட்டிய கலைமணி
(4) கலாவித்தகர் (5) கலாசுரபி

03) கதகளியில் சாந்தமான பாத்திரங்களுக்கு பூசப்படும் வேஷம்
(1) மினுக்கு (2) தாடி (3) சுண்ணாம்பு (4) பச்சை (5) கருத்தாடி

04) நடன உருப்படிகளுக்கு கற்பனையாக அபிநயம் செய்வதில் திறமை வாய்ந்தவர்
(1) ருக்மணிதேவி
(2) வழுவூர் இராமையாப்பிள்ளை
(3) பாலசரஸ்வதி
(4) பத்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(5) ஏரம்பு சுப்பையா

05) ரஸத்தோடு நேரடியான தொடர்புடையது
(1) விபாவம் (2) ஆலம்பனவிபாவம் (3) உத்தீபன விபாவம்
(4) அனுபாவம் (5) பாவம்

06) தன்னுடைய கணவன் தனக்கு அபராதஞ் செய்தபொழுது தனது கோபத்தை ஒளிக்காது நேராக வெளிப்படுத்துபவள்
(1) தீரா (2) அதீரா (3) தீரா தீரா (4) கன்னியா (5) பிரௌடா

07) கதக் நடனத்தில் சுத்த நிருத்தத்திற்கும் அதிசயமான தாள முறைகளை கையாளுவதில் புகழ் பெற்றவர்
(1) பிந்ததின் மகாராஜ் (2) தகுர் பிரசாத் (3) பைரோன் பிரசாத்
(4) பிரகஸ்ஜி (5) கல்க பிரசாத்

08) தாத்தா என அன்பாக அழைக்கப்பட்டவர்
(1) ஏரம்பு சுப்பையா
(2) பொன்னையா
(3) வழுவூர் இராமையாப்பிள்ளை
(4) பந்தணைநல் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(5) வடிவேலு

09) கள்ளினை உண்டு ஆடுதலை குறிப்பது
(1) உண்ணாட்டு (2) கொண்டாட்டம் (3) பாண்டரங்கம்
(4) களியாட்டம் (5) கும்மி

10) பிராணி மித்திரா என அழைக்கப்படுபவர்
(1) பாலசரஸ்வதி
(2) முத்துத்தாண்டவர்
(3) ருக்மணிதேவி அருண்டேல்
(4) மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(5) வீரமணிஐயர்

11) அழகுமிக்க அசைவுகளில் இருந்து தோன்றிய விருத்தி
(1) சாத்வதி (2) பாரதி (3) கைசிகி (4) ஆரபடி (5) ஸுரபதி

12) எட்டு சரணங்களை கொண்ட உருப்படி எது?
(1) ஜாவளி (2) வர்ணம் (3) பதம் (4) தில்லானா (5) அஷ்டபதி

13) விநாயகக் கடவுளைக் குறித்து அவரைப் போற்றி புகழ்ந்து அவரின் அருள்வேண்டி ஆடப்படும் வண்ணம்
(1) கிரளா வண்ணம் (2) கணபதி வண்ணம் (3) ஈரடி வண்ணம்
(4) உரக வண்ணம் (5) உக்குலா வண்ணம்

14) சிவன் தண்டு முனிவருக்கு போதிக்கும் காட்சி சித்திரிக்கப்படுவது
(1) தஞ்சையில்
(2) மதுரையில்
(3) காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தில்
(4) மாமல்லபுரத்தில்
(5) கனகசபையில்

15) எஜமானுக்கும் வேலைக்காரனுக்கும் இடையிலான பாவம்
(1) தாசியபாவம் (2) காந்தபாவம் (3) வாத்சல்யபாவம்
(4) சாக்கியபாவம் (5) மதுரபாவம்

16) நாட்டிய ஸாஸ்திரத்தில் அரங்கம் பற்றி கூறப்படும் அத்தியாயம்
(1) மூன்று (2) ஆறு (3) பத்து (4) இரண்டு (5) எட்டு

17) தீ மிதிப்பு, கரகம், காவடி, கோயில் பூசைகளில் பயன்படுத்தப்படும் இசைக்கருவி
(1) தப்பட்டை (2) சேமக்கலம் (3) வீணை (4) வயலின் (5) சங்கு

18) தமிழர் பண்பாட்டில் தேவதாசிகள் போன்று சப்ரகமுவ நடனத்தில் பெண்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
(1) திக்கெய் தட்டும் (2) மாணிக்க மகாகே (3) பிருகதம்பா
(4) தளியிலார் (5) பதியிலார்

19) இயலிசைவாரிதி என அழைக்கப்பட்ட நம்நாட்டுக் கலைஞர்
(1) ஏரம்பு சுப்பையா (2) நல்லையா (3) வீரமணிஐயர்
(4) சுப்பையர் (5) ஏரம்பு மூர்த்தி

20) திருப்புகழை அருளியவர்
(1) சேக்கிழார் (2) அருணகிரிநாதர் (3) சம்பந்தர்
(4) நாவுக்கரசர் (5) மணிவாசகர்

21) பல பக்கங்களிலிருந்தும் ஒளி பாய்ச்சப்படும் போது நிழல் விழாது தவிர்க்கப்படும் மேடை ஒளியூட்டல் பண்புகளில் ஒன்று
(1) பிரகாசம் (2) அசைவு (3) திரை (4) வர்ணம் (5) பரப்பொளி

22) ஆதியில் தெய்வங்களைச் சாந்தப்படுத்தவும் வழிபடவுமே இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன என கூறியவர்
(1) பேர்சியங் (2) ரூசோ (3) வடிவேலு
(4) ரூபசிங் (5) பொன்னையா

23) நாயக நாயகிகளான சேர்த்து வைப்பதில் திறமை உடையவள்
(1) சகி (2) தாஸி (3) சில்பிணி (4) சேடி (5) தூதி

24) முதன் முதலாக பரதநாட்டிய மரபிலே கீர்த்தனைக்கு நடனம் அமைத்தவர்
(1) ருக்மணிதேவி அருண்டேல்
(2) மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(3) பொன்னையாப்பிள்ளை
(4) வழுவூர் ராமையாப்பிள்ளை
(5) ஏரம்பு சுப்பையா

25) கதையை மையமாகக் கொண்ட சாஸ்திரிய நடனம்
(1) கதகளி (2) கதக் (3) மணிப்புரி (4) ஒடிசி (5) மோகினி

26) ஸ்ரீபலி கொடுக்கப்படும் போது வாத்தியங்கள் இசைக்கப்படும் காலம்
(1) மத்திமகாலம் (2) துரிதகாலம் (3) விளம்பகாலம் (4) சௌக்ககாலம் (5) நீண்டகாலம்

27) நல்ல மனிதர்களையும், நல்ல சமுதாயத்தையும் உருவாக்க கல்வி அவசியம் என வலியுறுத்தியவர்
(1) கால்மாக்ஸ் (2) காந்தி அடிகள் (3) லெனின் (4) ரூசோ (5) மைக்கல்

28) அபிநய தர்ப்பணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
(1) ஆனந்தகுமாரசுவாமி (2) உ. வே. சுவாமிநாதையர்
(3) பரதமுனிவர் (4) நந்திகேஸ்வரர்
(5) கபிலாவாத்சல்ஜான்

29) டோக்கி என்ற மத்தளத்தை கழுத்தில் கட்டி கையினால் வாசித்தபடி ஆடுவது
(1) நட்டபாலா (2) கர்த்தாசோலோம் (3) புங்சோலோம்
(4) லைச்சந்தனம் (5) சங்கீர்தன

30) கரணம் என்பது
(1) அடவு
(2) தீர்மானம்
(3) அசைவு
(4) நிலையாக நிற்றல்
(5) உடல் அசைவுகள், பாதங்கள் நிருத்த ஹஸ்தங்களின் சேர்க்கை

31) நடனக் களஞ்சியமாக விளங்கும் ஆலயம்
(1) சிதம்பரம் (2) காஞ்சிகாமாட்சி (3) மதுரை மீனாட்சி
(4) தஞ்சை ப்ருகதீஸ்வரர் (5) ஸ்ரீரங்கம்

32) கொக்குவில் கலாபவனத்தின் ஸ்தாபகர்
(1) ஏரம்பு சுப்பையா (2) வீரமணிஐயர் (3) நல்லையா
(4) சாந்தினி சிவநேசன் (5) சபா ஜெயராஜா

33) ; ; ; ; ; ; ; ; , ததிங்கணதொம் ததிங்கணதொம் ததிங்கணதொம் அமைந்த ஜாதி
(1) திஸ்ரம் (2) சதுஸ்ரம் (3) கண்டம் (4) மிஸ்ரம் (5) சங்கீர்ணம்

34) அபிநய அரசிக்கு இந்திய அரசு 1977 இல் வழங்கிய பட்டம்
(1) கலாநிதி (2) பத்மபூஷன் (3) அபிநயஅரசி
(4) நாட்டியமேதை (5) சங்கீத கலாநிதி

35) பரதநாட்டியத்தில் சப்தம் வர்ணம் போல் கதக் நடனத்திற்கு
(1) பஜன் கஸல் (2) வெஸ் நையாண்டி (3) துருபத்தும் கயலும்
(4) பதம் ஜாவளி (5) கயல்

36) ஊர் மக்கள் வந்து காண்பதற்காக அமைக்கப்பட்ட அங்கம்
(1) கூத்தம்பலம் (2) ஆடம்பலம் (3) களரி (4) திறந்தவெளி (5) பேரம்பலம்

37) ஆடம்பர அழகு நிரம்பியதாக இருக்கும் நாடகம் எவ்வகைப் பண்புடையது?
(1) குறியீட்டு பண்பு (2) நிஜத்தை (3) மனோரதியப் பண்பு
(4) ஒற்றுமைப் பண்பு (5) நிஜமற்ற பண்பு

38) கருண ரஸத்தை பிரதிபலிக்கும் இராகம்
(1) மோஹனம் (2) பேகட (3) லதாங்கி (4) முகாரி (5) கானடா

39) தவம் செய்யும் நிலையை குறிக்கும் பாதபேதம்
(1) சமபாதம் (2) ஐந்திரம் (3) ஏகபாதம் (4) ஸ்தானகம் (5) காருடம்

40) வரிக்கூத்தின் உறுப்பாக காணப்படுவது
(1) வரிக்கோலம் (2) குரவை
(3) சாக்கையர்கூத்து (4) பஞ்சசந்திக் கௌத்துவம்
(5) வேட்டுவவரி

41) பாணாசுரனின் மகள்
(1) மேனகை (2) ரம்பை (3) உஷை (4) ஊர்வசி (5) உமை

42) நிருத்த விநோதன் என்ற விருதுப் பெயர் கொண்ட மன்னன்
(1) முதலாம் ராஜராஜசோழன் (2) மூனறாம் இராஜராஜசோழன்
(3) சுந்தரபாண்டியன் (4) விக்கிரமசிங்கன்
(5) புலிகேசி

43) தயா வீரனுக்கு உதாரணம்
(1) அர்ச்சுனன் (2) கர்ணன் (3) தசரதன்
(4) சிபிச்சக்கரவர்த்தி (5) மகேந்திரவர்மன்

44) “கண்ணனைக் கண்டே நீ கன்னியின் நிலை சொல்லு காணக்குயிலே சென்று வா” என்ற பாடல் யார் யாருக்கு கூறுவதாக அமைந்துள்ளது?
(1) தலைவன் தலைவிக்கு (2) தலைவி குயிலுக்கு
(3) குயில் தலைவிக்கு (4) தோழி தலைவிக்கு
(5) தலைவி தோழிக்கு

45) உயிருள்ள உயிரினங்களைப் பயன்படுத்தும் ஆஹார்ய அபிநயம்
(1) சஞ்சீவம் (2) அலங்காரம் (3) புஷ்டம்
(4) அங்கரச்சனம் (5) ஸத்விகா அபிநயம்

46) நிலையற்ற தன்மை உடைய பாவம்
(1) விபாவவம் (2) ஆலம்பன பாவம் (3) உதீபன பாவம்
(4) ஸஞ்சாரி பாவம் (5) அனுபாவம்

47) மொகலாயர் ஆட்சியின்போது வளர்ந்த நடன மரபு
(1) கதகளி (2) ஒடிசி (3) மோகினி (4) கதக் (5) மணிப்புரி

48) மாபலி சக்கரவர்த்தியின் அகந்தையை அடக்க விஷ்ணுவால் எடுக்கப்பட்ட அவதாரம்
(1) வாமணன் (2) பரசுராமன் (3) ராமன் (4) கூர்ம (5) வராக

49) பஹூத்வனி வாத்தியம் என்பது
(1) வயலின் (2) மிருதங்கம் (3) புல்லாங்குழல் (4) நாதஸ்வரம் (5) வீணை

50) வருவேன் வருவேன் என்ற பதம் அமைந்த இராகம்
(1) கல்யாணி (2) ஹம்ஸத்வனி (3) ஆரபி (4) மோகனம் (5) பந்துவராளி

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
# Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | பரதநாட்டியம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **பகுதி - I இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும் பகுதி - II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி - I

01) i) நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம் தாளம், சாகித்திய கர்த்தா நடன அமைப்பாளர்களையும் குறிப்பிடுக. (4 புள்ளி)

ii) இப்பதவர்ணத்தின் முத்தாய்ஸ்வரக்கோர்வையினை தாள அங்க குறியீட்டில் எழுதுக. (8 புள்ளி)

iii) இப்பதவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியின் பாடல்களின் கருத்தினை எழுதுக. (8 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02) பரத நாட்டிய மேடை அமைப்பு முறையினை பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி விளக்குக.

i) அரங்கு

ii) ஒலி

iii) ஒளி

iv) காட்சி விதானிப்பு ($4 \times 5 = 20$ புள்ளிகள்)

03) i) இசைக்கருவிகளின் வகைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

ii) இசைக்கருவிகளில் வீணையின் அமைப்பு வாசிக்கும் முறை பற்றி எழுதுக. (16 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி - II

04) சப்ரகமுவ நடனம் பற்றி எழுதுக. (20 புள்ளிகள்)

05) சிறுகுறிப்பு எழுதுக.

i) அஷ்டபதி

ii) தூதிகா லக்ஷணம்

iii) ஆச்சியர் குரவை

iv) நவரஸம் ($4 \times 5 = 20$ புள்ளிகள்)

06) கொஞ்சு தமிழில் மிஞ்சி விளையாடிய சந்தக் கவிஞரின் வாழ்க்கைப் பிண்ணனியையும் அவரது கலைத் தொண்டினையும் தருக. (20 புள்ளிகள்)

07) ஆலயங்களில் பரதக் கலையின் முக்கியத்துவத்தினை விளக்குக. (20 புள்ளிகள்)

08) நீர் பார்த்து ரசித்த அரங்கேற்ற நிகழ்வின் விமர்சனத்தை எழுதுக. (20 புள்ளிகள்)